312—

சுற்றுலாத் தலம்

***19561—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பச்சைமலைப் பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கிய இயற்கை எழில்கொண்ட கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக பச்சைமலைப் பகுதி விளங்குகிறது. இப்பகுதியின் சுற்றுலா முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள பச்சைமலையில் சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா வசதிகள் மேம்படுத்தப்படும் என்று அறிவித்து, அப்பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.2 கோடியே 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் மேற்படி பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் பொது மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சைமலை ஊராட்சியில் மா, பலா, வாழை, கொய்யா போன்ற*

2014 ஆகஸ்ட் 1]

பழ வகைகள் அதிகமாக விளைகின்றன. அப்பகுதி மக்கள் துறையூர், உப்பிலியாபுரம் வழியாக தம்மம்பட்டி, கெங்கவல்லிக்கு மலையிலிருந்து கீழே இறங்கி வந்துதான் இந்தப் பழங்களை விற்பனை செய்கிறார்கள். பச்சைமலைப் பகுதியில் அதிகப்படியான பேருந்து வசதியும் இல்லை. அங்கு விளையும் விளைபொருட்களைத் தங்கள் தலையில் சுமந்துதான் அப்பகுதி மக்கள் மலையிலிருந்து கீழே கொண்டு வருகிறார்கள். எனவே பச்சைமலை ஊராட்சியைச் சுற்றுலாத் தலமாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் பச்சைமலைப் பகுதி சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு, ரூ.2 கோடியே 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் அந்தப் பகுதி வளர்ச்சியடைய ஏதுவாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்தப் பணிகள் விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலைப் பகுதியைத்தான் அரசு சுற்றுலாத் தலமாக அறிவித்துள்ளது. சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட பச்சைமலை ஊராட்சி மலைவாழ் மக்கள் மலையிலிருந்து தங்கள் தேவைகளுக்காக, அதாவது, சாதிச் சான்றிதழ், வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்காக மலையிலிருந்து கீழே வரவேண்டுமென்றால், திருச்சி மாவட்டத்தைச் சுற்றி உப்பிலியாபுரம் வழியாக சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால், ஒரு நாள் முழுவதும் செலவாகிறது.

அப்பகுதி மக்களுக்கு அதிகப்படியான பேருந்து வசதியும் இல்லை. ஒரேயொரு பேருந்துதான் இயக்கப்படுகிறது. அந்தப் பேருந்தும் ஏற்காடு கோடை விழா, மாதேஸ்வரன் மலைத் திருவிழா, ஆடிப்பெருக்கு விழா என்று அடிக்கடி திருப்பி அனுப்பப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். எனவே அப்பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் கூடமலை, நரிவாடி ஊராட்சி வழியாக போக்குவரத்துக்கு ஏற்ப சாலை அமைத்துக்கொடுத்து, பச்சைமலை ஊராட்சியைச் சுற்றுலாத் தலமாக மாற்றினால், அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்; வாழ்க்கைத் தரமும் உயரும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட பச்சைமலை ஊராட்சியைச் சுற்றுலாத் தலமாக அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 313, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

313—

புதிய கட்டடம்

***17613—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—